தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2026

ஆண்டு: 6 **திகதி**: 13.06.2026

நேரம்: 2:00 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா
உதவி: திருமதி ஜனனி எலியேசர்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	10	
வினா 2	20	
வினா 3	20	
வினா 4	15	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	10	பக்கம்	2

1. கேட்டல் (Listening)

ஆசிரியர் வாசிக்கும் உரையாடலை அவதானமாகக் கேட்டுக் கிரகித்து, கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

1. முயலும் ஆமையும் எங்கே வாழ்ந்தன?

---

2. முயல், ஆமையின் பெயர்கள் என்ன?

---

3. மீனா ஏன் போட்டி நடுவில் தூங்கிவிட்டாள்?

---

4. ராஜா மெதுவாக நடந்தும் எப்படி வெற்றி பெற்றான்?

---

5. நீர் மீனாவாக இருந்தால் என்ன செய்திருப்பீர்?

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	2

2. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை தாருங்கள்.

மிருகக் காட்சிச் சாலை

என் பெயர் இனியவள். ஞாயிற்றுக் கிழமை எமக்குப் பாடசாலை விடுமுறை, நாம் குடும்பமாக மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றோம். அங்கே நாரை, கொக்கு, கிளி போன்றன சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தன. குரங்குகள் கூடுகளிலும், மற்றும் சில வெளியே உள்ள பெரிய மரங்களிலும் தாவித் திரிந்தன.

சிங்கத்தின் கர்ச்சனை கேட்டது. அது ஒரு குகை போன்ற கூட்டில் நின்றது. புலி, சிறுத்தை, கரடி, போன்றனவும் பெரிய கூடுகளில் நின்றன. அவை அங்கும் இங்குமாக நடந்து திரிந்தன.

பலவிதமான பாம்பு இனங்களும், பெரியதும் சிறியதுமாக பலவர்ண நிறங்களில் இருந்தன. அவற்றைப் பார்த்து எனது தங்கை மிகவும் பயந்தாள்.

அங்கே ஒரு சிறிய குளம் இருந்தது. அதில் வாத்து, தாரா, என்பனவும், சில வகையான மீன்களும் நீந்தித் திரிந்தன. கண்ணாடிப் பெட்டிகளில் பலவர்ண மீன்கள் அழகாக நீந்தித் திரிந்தன. அவற்றைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

நீண்ட கழுத்துடைய ஒட்டகச் சிவிங்கி, ஒட்டகம், வரிக்குதிரை போன்றவற்றையும் பார்த்தோம். மாலையில் யானை நடனத்தையும் பார்த்து மகிழ்ந்துவிட்டு வீடு திரும்பினோம்.

1. இனியவளின் குடும்பம் எங்கே சென்றார்கள்?

_____

2. அவர்கள் எந்தக் கிழமை நாளில் சென்றார்கள்?

_____

3. அங்கே சுதந்திரமாகச் சுற்றித்திரிந்த உயிரினங்கள் எவை?

_____

4. பலவர்ண மீன்கள் நீந்தித் திரிந்தன. இதில் வர்ணம் என்பதன் பொருள் என்ன?

_____

5. கர்ச்சனை செய்த மிருகம் எது?

_____

6. கூடுகளில் உலாவித் திரிந்த நான்கு மிருகங்களின் பெயர்களை எழுதுங்கள்.

_____

7. குளத்தில் நீந்தித் திரிந்த உயிரினங்கள் எவை?

_____

8. நீளமான கழுத்தையுடைய மிருகம் எது?

_____

9. எந்த மிருகத்தின் நடனத்தைக் கண்டு களித்தார்கள்?

_____

10. மேலே உள்ள மிருகங்களில் உங்களுக்குப் பிடித்த மிருகம் எது?
ஏன் பிடிக்கும் என ஒரு வசனத்தில் கூறவும்.

_____

_____

வினா இல	3	புள்ளிகள்	20	பக்கம்	4

3(a). பொருள் விளங்க வாக்கியங்கள் எழுதுங்கள்.

1. மழை _____

_____

2. அழகு _____

_____

3. மணம் _____

_____

4. ஆடு _____

_____

5. கரை _____

_____

3(b). பின்வரும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

1. வாணி வீணை மீட்டுவாள் – இந்த வாக்கியத்தின் செயற்படுபொருள் என்ன?

_____

2. அம்மா கோவிலுக்குச் சென்றாள். இந்த வாக்கியத்தின் எழுவாய் என்ன?

_____

3. பிரித்தெழுதுங்கள்

வகுப்பறை : _____

அழைப்பிதழ் : _____

5. சேர்த்தெழுதுங்கள்

மா + பழம் : _____

தேன் + கூடு : _____

7. பறவைகள் பறந்தன. பறந்தன என்பது என்ன காலம்?

_____

8. மழை பெய்கிறது. பெய்கிறது என்ன காலம்?

_____

9. அம்மாவின் சகோதரர் உமக்கு என்ன முறை?

_____

10. சித்தப்பாவின் மனைவியை நீர் எப்படி அழைப்பீர்?

_____

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	5

அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகங்களில் ஒன்றான குவாலா பற்றி உமது தாய் நாட்டில் வசிக்கும் உமது உறவினருக்கு 50 சொற்களுக்குக் குறையாது ஒரு கடிதம் எழுதுங்கள்.

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	6

இங்கே கொடுக்கப்பட்டுள்ள கதையை வாசித்து உங்கள் கற்பனையில், 50 சொற்களுக்கு குறையாது எழுதி தொடருங்கள்.

மணி என்ற நாய்க்குட்டி எனது வீட்டின் செல்லப் பிராணியாகும். மணியில் நாங்கள் அனைவரும் பாசமாக இருப்போம். அது எம்முடன் நன்றாக விளையாடி மகிழும்.

ஒரு நாள் மாலைப் பொழுதில் மணியை விளையாடுவதற்காக விளையாட்டுத் திடலுக்கு அழைத்துச் சென்று பந்தெறிந்து விளையாடினோம். நான் பந்தை எறிய மணி ஓடிச் சென்று பந்தை வாயில் கௌவிக்கொண்டு ஓடி வந்து தருவான். ஒருமுறை நான் எறிந்த பந்து சற்றுத் தூரம் பறந்து ஒரு புதருக்குள் விழுந்தது. பந்தை எடுக்க ஓடிச் சென்ற மணி திரும்பி வரவில்லை. நான் பதட்டத்துடன் மணி! மணி! என்று கூப்பிட்டவாறு மணியைத் தேடிச் சென்றேன். மணியைக் காணவில்லை. மாலை இருள் சூழத் தொடங்கியது. நான் பதட்டத்துடன் அழுதபடி வீட்டிற்கு ஓடி வந்து அப்பாவிடம் நடந்ததைக் கூறினேன்.

அப்பா . . . . ._____

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	7

பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுங்கள்.

1. எனது குடும்பமும் உறவினர்களும்
2. கல்வியின் முக்கியத்துவம்
3. தமிழர் திருநாள்
4. எமது தமிழ்ப் பாடசாலையின் கலை விழா
5. அன்னையர்தினம்